# மார்த்தாண்டம் நேசமணி கல்லூரியில் பட்டமளிப்பு விழா




■ மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி மாணவிக்கு நெல்லை பல்கலை துணைவேந்தர் பிச்சுமணி பட்டம் வழங்கினார்.

மார்த்தாண்டம், ஏப். 30-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடந்தது. கல்லூரி தாளாளர் டாக்டர் வினோத் குமார் தலைமை வகித்தார். முதல்வர் டாக்டர் பால்ராஜ் அறிக்கை வாசித்தார். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பிச்சுமணி மாணவ, மாணவிகளுக்கு பட்டம் வழங்கி பேசியதாவது:

ராங்க் பெற்றவர்களை வாழ்த்துகிறேன். இது அவர்களின் வாழ்க்கையில் ஒரு படிக்கல் ஆகும். உலகம் பல மாற்றங்களை சந்தித்து உள்ளது. முதல் புரட்சி விவசாய புரட்சி, அதைத் தொடர்ந்து தொழில் புரட்சி நடந்தது.

தொழில் புரட்சி பல நிலைகளைக் கொண்டது. இது வெகுஜன உற்பத்தி மற்றும் வெகுஜன நுகர்வு ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது. அடுத்து தகவல் மற்றும் கம்ப்யூட்டர் புரட்சி. இது அறிவு மற்றும் தகவல் சகாப்தத்தை கொண்டது.

இவ்வாறு துணைவேந்தர் பேசினார்.

விழாவில், 2019 - 2020 கல்வி ஆண்டில் தேர்ச்சி பெற்ற 1,100 மாணவ, மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது. பல்கலை அளவில் ரேங்க் பெற்ற 20 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை முதல்வர் டாக்டர் பால்ராஜ் தலைமையில், கல்வியாளர் ஜெப மெல்வின் மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.